16 ஜனவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 2 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**



Image: ©123rf.com

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் வாரம்**

# நாம் அனைவரும் ஒன்றாய் இருப்போம்

இந்த 2022 ஆம் ஆண்டின் இந்த வாரம் கிறிஸ்தவ ஒற்றுமைக்கான வாரத்தைக் குறிக்கிறது. கடந்த இரண்டு வாரங்களில் இறைவனின் வெளிப்பாடு, ஆண்டவரின் திருக்காட்சி மற்றும் ஆண்டவரின் திருமுழுக்கு ஞாயிற்றுக்கிழமைகளை நாம் நினைவுகூரும்போது, இயேசு உருவாக்கிய புதிய உடன்படிக்கைக்கு மனித குலம் அனைத்தையும் அழைத்த இயேசுவின் அழைப்பு மற்றும் தொடக்கத்தை நாம் நினைவுகூரவேண்டும். இந்த வாரம் மலேசிய திருஅவைக்கான இறைவேண்டல் வாரமாக, அனைத்து பிளவுகளையும் துண்டித்து, கிறிஸ்துவில் நம் ஒற்றுமையைக் கொண்டாடுவோம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது.

(1 கொரி: 12:7)

இன்று எசாயா 42 அதிகாரத்தை வாசிக்கும்போது, நாடுகடத்தப்பட்ட மக்கள் சிதைந்துபோயிருந்தாலும், இறைவாக்கினர் அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய எதிர்நோக்கைக் காணுமாறு செய்கிறார். ஊழியனின் பாடலைப் பாடுகிறார். சீயோன் மக்களுக்கு ஒரு புதிய விடியல் என்றும், எரியும் சுவாலையாக அவர்களுக்கு வெற்றி கிடைக்குமென்றும் அவர் பாடுகின்றார். கடவுளின் கனிவான கருணையை அனைத்து நாடுகளும் காணும். மேலும் சீயோனுக்கு ஒரு புதிய பெயர் அருளப்படும். மணமகன் மணமகளுக்காக மகிழ்வுறுவதுபோல் ஆண்டவர் அவர் தம் மக்களில் மகிழ்ச்சியுறுவார்.

அனைத்து வயதுக் கிறிஸ்தவர்களும் இந்த எதிர்நோக்கை இயேசுவில் கொண்டுள்ளனர். பழைய ஏற்பாட்டில் உள்ள மணமகன் மற்றும் மணமகளுக்கான உருவகத்தை, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கும் அவருடைய திருஅவைக்கும் உருவகப்படுத்திப் பார்க்கிறோம். எனவே கானாவூர் திருமணத்தை அந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்போம். கானாவூர் திருமணத்தில் அந்தத் தம்பதிகளின் பெயரை யோவான் குறிப்பிடாதது ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல; ஏனென்றால் அந்த நிகழ்வு இயேசுவைப் பற்றியது. அவருடைய முதல் அருளடையாளத்தைப் பற்றியது. இயேசுவின் தாயான மரியாவின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. இருந்தபோதும் பின்னர் அவரே திருஅவையின் தாய் என்று குறிப்பிடுகிறோம். கானாவூர் திருமணத்தின்போது அருளப்பட்ட மிகுதியின் கொடை கடவுளின் அரசைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை நமக்குக் கொடுக்கிறது. கானாவூர் திருமணவிருந்து கிறிஸ்துக்கும் திருஅவைக்குமான ஒரு ஆன்மீக உறவை நமக்கு சுட்டிக் காட்டுகிறது. மேலும் அந்த ஒன்றிப்பு கல்வாரியில் நிறைவுகிறது.

வரவிருக்கும் காலத்தில் மணமகனோடு இணைய திருஅவை காத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில், ஒரே ஆவியிலிருந்து பெறப்படும் வேறுபட்ட கொடைகளை அனைவரின் நன்மைக்காகவும் பயன்படுத்திட என்றும் உண்மையில் நிலைத்திருக்கவும் வேண்டும். இந்த கிறிஸ்தவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் செய்யும் இந்த வாரத்தில். ஒரே ஆண்டவரும், மீட்பருமான இயேசு கிறிஸ்துவில் இருந்துதான் நாம் நம்பிக்கை என்னும் கொடையைப் பெற்றுக்கொண்டோம் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். இயேசுவையும் நற்செய்தியையும் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்காக நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்" (யோவான்: 17:21)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 62: 1-5;

திபா: 96:1-3, 7-10;

1 கொரி: 12: 4-11;

யோவான்: 2: 1-11.

INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org